## காஞ்சிபுரம் மாவட்டம்

## அறிவிக்கை ( Notification)

## சத்துணவு அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் நேரடி நியமனம்

ந.க.எண்.598/2020/சஉதி/அ1 நாள். 22.09.2020.

காஞ்சிபுரம் மாவட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்ட பள்ளி சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள **80** சத்துணவு அமைப்பாளர் காலிப் பணியிடங்களுக்கு ரூ.7700–24200 என்ற ஊதிய விகிதத்தின் கீழ் மற்றும் **107** சமையல் உதவியாளர் காலிப் பணியிடங்களுக்கு ரூ.3000–9000 என்ற ஊதிய விகிதத்தின் கீழ் நேரடி நியமனம் மூலம் நிரப்பிட பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**<u>ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி வாரியான அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணியிட விவரம்.</u>**

| வ.எண் | ஊராட்சி ஒன்றியம் / நகராட்சியின் பெயர் | அமைப்பாளர் காலி பணியிடங்கள் | சமையல் உதவியாளர் காலி பணியிடங்கள் |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 13 | 20 |
| 2 | வாலாஜாபாத் | 24 | 23 |
| 3 | உத்திரமேரூர் | 13 | 25 |
| 4 | குன்றத்தூர் | 16 | 15 |
| 5 | திருப்பெரும்புதூர் | 13 | 18 |
| 6 | காஞ்சிபுரம் நகராட்சி | 1 | 6 |
| | **மொத்தம்** | **80** | **107** |

**இன சுழற்சி வாரியான அமைப்பாளர் காலிப்பணியிட விவரம்.**

| வ.எண் | வகுப்பினர் | காலிப் பணியிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர் (அருந்ததியினர்) | 3 |
| 2 | ஆதிதிராவிடர் | 10 |
| 3 | பழங்குடியினர் | 1 |
| 4 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 14 |
| 5 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லீம்கள் | 1 |
| 6 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லீம்கள்தவிர | 18 |
| 7 | பொதுப்பிரிவு | 20 |
| 8 | இனசுழற்சி அற்ற சிறுபான்மையினர் பள்ளிகள் | 13 |
| | **மொத்தம்** | **80** |

இன சுழற்சி வாரியான சமையல் உதவியாளர் காலிப்பணியிட விவரம்.

| வ.எண் | வகுப்பினர் | காலிப் பணியிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர் (அருந்ததியினர்) | 3 |
| 2 | ஆதிதிராவிடர் | 15 |
| 3 | பழங்குடியினர் | 1 |
| 4 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 20 |
| 5 | பிற்படுத்தப்பட்ட வுகுப்பினர் முஸ்லீம்கள் | 4 |
| 6 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லீம்கள்தவிர | 26 |
| 7 | பொதுப்பிரிவு | 31 |
| 8 | இனசுழற்சி அற்ற சிறுபான்மையினர் பள்ளிகள் | 7 |
| | **மொத்தம்** | **107** |

**<u>அமைப்பாளர் பணிக்கான தகுதிகள்</u>**

| இனம் | வயது | கல்வித் தகுதி |
|---|---|---|
| பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் | 31.08.2020 அன்றைய தேதியின்படி 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். | 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| பழங்குடியினர் | 31.08.2020அன்றைய தேதியின்படி 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும் | 8ம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும் |

நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்பிற்கும் இடையே உள்ள தூரம் 3 கி.மீ இருக்க வேண்டும்.

**<u>சமையல் உதவியாளர் பணிக்கான தகுதிகள்</u>**

| இனம் | வயது | கல்வித் தகுதி |
|---|---|---|
| பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் | 31.08.2020 அன்றைய தேதியின்படி 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும் | 5ம் வகுப்பு தேர்ச்சி அல்லது தோல்வி பெற்றிருக்க வேண்டும் |
| பழங்குடியினர் | 31.08.2020 அன்றைய தேதியின்படி 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும் | எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும் |

விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் 31.08.2020 அன்றைய தேதியின்படி 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்பிற்கும் இடையே உள்ள தூரம் 3 கி.மீ இருக்க வேண்டும்.

மேற்படி பணியிடங்கள் அரசு விதிமுறைகளின்படியும் மாண்புமிகு நீதிமன்ற ஆணைக்குட்பட்டு நிரப்பப்படும். கல்வித் தகுதி, இருப்பிடம், சாதி, விதவை / கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் இதர முன்னுரிமை சான்றுக்கான ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். ஏற்கனவே, பணியில் இருப்பவர்கள் மேற்காணும் பதவிகளுக்கான அனைத்து தகுதிகளும் பெற்றிருப்பின் சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டு அலுவலர் மூலமாக விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

காஞ்சிபுரம் மாவட்ட எல்லைக்குட்பட்டு வசிப்பவராக இருத்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் கல்வி, இருப்பிடம், சாதி, விதவை / கணவனால் கைவிடப்பட்டவர் மற்றும் இதர முன்னுரிமைக்கான சான்றிதழ்களின் நகல்களை இணைத்து சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி அலுவலகத்தில் **25.09.2020** ம் தேதி முதல் **05.10.2020** மாலை 5.00 மணிக்குள் நேரில் தர வேண்டும். இதற்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தகுதியற்ற விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு கடிதம் அனுப்பப்படமாட்டாது. காலிப்பணியிட விவரங்களும், இனசுழற்சி விவரங்களும் மற்றும் விண்ணப்ப படிவமும் https://kancheepuram.nic.in என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
காஞ்சிபுரம்.

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்
## சத்துணவு அமைப்பாளர் / சமையல் உதவியாளர் பணிக்கான விண்ணப்பம்
## காஞ்சிபுரம் மாவட்டம் – 2020

ஊராட்சி ஒன்றியம் / நகராட்சியின் பெயர் : -

பாஸ்போர்ட் அளவு புகைப்படம் (Passport Size Photo)

1. விண்ணப்பதாரரின் பெயர் :
2. விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் மற்றும் சத்துணவு மையத்தின் பெயர் :
3. தகப்பனார் / கணவர் பெயர் :
4. பிறந்த தேதி மற்றும் வயது (31.08.2020 அன்று) :
5. கல்வித் தகுதி :
6. விண்ணப்பதாரரின் நிரந்திர முகவரி :
7. வகுப்பு (SC/ST/MBC/BC/BCM/OC) :
8. விண்ணப்பதாரர் திருமணம் ஆனவரா ? :
   விண்ணப்பதாரர் விதவையா ? ஆதரவற்ற விதவையா ? கணவரால் கைவிடப்பட்டவரா ? ஆம் எனில் அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும் :
9. கைபேசி எண் :
10. விண்ணப்பதாரர் குடும்பத்தில் உள்ள நபர்கள் விவரம் :

| வ.எண் | பெயர் | வயது | உறவு | அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனத்தில் பணிபுரிந்தால் அதன் விவரம் | மாத வருமானம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

### உறுதி மொழி

மேலே என்னால் கொடுக்கப்பட்ட விவரங்கள் யாவும் உண்மை என்றும், உண்மைக்கு மாறானது என்று தெரிய வந்தால் நிர்வாகம் எடுக்கும் நடவடிக்கைக்குக் கட்டுபடுகிறேன் என்றும் உறுதி அளிக்கிறேன்.

இடம் :

நாள் : விண்ணப்பதாரரின் கையொப்பம்

**குறிப்பு** : கல்வித் தகுதி, பிறந்த தேதி, சாதி, இருப்பிடம் ஆகியவற்றிற்கான சான்று, விதவை, கணவனால் கைவிடப்பட்டோர், மாற்று திறனாளியாகயிருப்பின் அதற்கான உரிய அலுவலரிடம் பெறப்பட்ட சான்று கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.